DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

Name: ராமமூர்த்தி

Father's Name: சக்கரவர்த்தி

Village: ஆவாரங்குப்பம்

Taluk:
Caste:
Calling:
Religion:
Age: 58

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 26.06.2023.

O.S.No.55/2018 - DW1

2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -

01) வழக்குச்சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தந்தை சக்கரவர்த்திக்கு பாத்தியப்பட்டதாகும். எனது தந்தை சக்கரவர்த்தி 05.03.1997 அன்று யார் பெயருக்க உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் தியாகு பெயருக்கு உயில் எழுதி வைத்துள்ளார். தியாகு பெயருக்கு எவ்வளவு சொத்துக்களை உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் 1 ஏக்கர் 32 சென்ட் சொத்தினை எழுதி வைத்துள்ளார். சக்கரவர்த்தி எழுதி வைத்த உயில் சொத்தின் ஒரு பகுதி எனக்கு பாகமாக கிடைத்த சொத்தா என்றால் இல்லை. 04.03.2012 தேதியிட்ட பாக பாத்திய அக்கு விடுதலை பத்திரம் யாரால் யாருக்கு எழுதி வைக்கப்பட்டது என்றால் என்னால் தியாகு பெயருக்கு எழுதிவைக்கப்பட்டதாகும். 22.11.1993 அன்று நான் வாசு என்கிற விஜயசங்கர் பெயருக்கு கிரையம் எழுதிக்கொடுத்த சொத்தானது யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு முன்பு எனது தந்தை சக்கரவர்த்திக்கு பாத்தியப்பட்டதாகும்.

02) வாசு என்கிற விஜயசங்கர் பெயருக்கு நான்தான் கிரையம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 05.03.1997 அன்று எனது தந்தை சக்கரவர்த்தி தியாகு பெயருக்கு உயில் எழுதி வைப்பதற்கு முன்பு என்பெயரில் எந்த சொத்தும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதுபோன்று எனக்கு உரிமையில்லாத சொத்தினை தான் வாசு என்கிற விஜயசங்கருக்கு 21.11.1993 அன்று கிரைய ஆவணமாக அடமான நோக்கத்திற்காக எழுதிக்கொடுத்ததாக தெரிவித்தேனா என்றால் ஆமாம் சரிதான். வாசு என்கிற விஜயசங்கரிடம் கடனாக பெற்ற தொகை ரூ.18,500/-த்தை திரும்ப செலுத்தி பைசலுடன் முடிக்கப்பட்ட பத்திரத்தை திரும்ப பெற்றுவிட்டதாக நான் கூறும் அந்த உடன்படிக்கை பத்திரம் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. எனது முதல் விசாரணையில் டி.சி.ராஜவேலு என்பவருக்கு கடந்த 19.09.1994-ம் தேதியில் கிரையம் கொடுத்ததா சொல்லியுள்ள கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால்

செய்துள்ளேன், நீதிமன்றம் சாட்சியிடம் விளக்கி கூறி கேட்டபோது சாட்சிய கையொப்பம் செய்துள்ளதாக தெரிவித்துள்ள நிலையில், பின்னிட்டு தான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என சாட்சியம் அளிக்கிறார்.

2-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.